687

ஸ்ரீஹரி :

हिन्दू-संस्कृति का स्वरूप

# ஹிந்து பண்பாட்டின் இயல்பு

6ஆ2

எழுதியவர்

MADRAS

ஹனுமான் பிரஸாத் போத்தார்

வெளியிடுவோர் :

கீதா பிரஸ், கோரக்பூர்

Q2
N56.
178078

பதிப்பித்தவர் :
கனசியாம்தாஸ் ஜாலான்,
கீதா பிரஸ், கோரக்பூர்

முதற் பதிப்பு: மார்ச் 1956

விலை அணா ஒன்று

அச்சிட்டவர் :
ஹிந்தி பிரசார பிரஸ், சென்னை-17

OFFICE OF THE REGISTRAR OF ...
20 MAR 1956

ஓம்

ஸ்ரீ பரமாத்மனே நம:

# ஹிந்து பண்பாட்டின் இயல்பு

## முக்கிய லட்சியம் இறைவனைப் பெறுவது

வாழ்வின் எல்லாத் துறைகளிலும் பரவி, தொல் பெருங் காலத்திலிருந்து வழிவழியாக வந்து, பரம் பொருளையே சிறப்பாகக் கொண்டு, தர்மமயமாகி, நன்கு பண்பட்ட 'சிந்தனையும் ஒழுக்கமுறை'யுமே ஹிந்து பண்பாடு என்னும் பெயர் பெறும். ஹிந்து பண்பாடு என்னும் இந்தத் தெள்ளிய வெள்ளம் மிகப் பழங்காலத்தி லிருந்து இடைவிடாமல் பெருகுகிறது. அதனால்தான் ஹிந்து பண்பாடு ஏனையவற்றைக் காட்டிலும் பழமை யானது, மாற்ற இயலாதது, அநாதியானது, பாரத நாட்டைச் சார்ந்த உன்னதமான பண்பாடு; இதுதான் உண்மையில் மனிதப் பண்பாடு. இந்தப் பண்பாட்டில் மானிட வாழ்க்கையின் முக்கியமான ஒரே லட்சியம்- மோட்சம், ஞானம் அல்லது இறைவனைப் பெறுவது. ஆதலால், இதில் வாழ்வின் ஒவ்வொரு செயலும் இயக்க மும் இந்த லட்சியத்தை நினைவில் கொண்டே செய்யப் பெறுகிறது, இதனாலேயே, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நம்முடைய நான்கு உறுதிப் பொருள்களில் கடைசியாக மோட்சத்துக்கு இடமளித்திருக்கிறார்கள். நம் பொருளும் இன்பமும் அறத்தினால் இயங்குகின்றன— அறத்துக்குக் கட்டுப்பட்டிருக்கின்றன என்பது தெளிவு. அறமற்ற பொருளும் அறமற்ற இன்பமும் பெரிய அனர்த் தங்களை உண்டாக்கி மனிதனை அழிக்கின்றன. இராவணன்,

வேனன், கம்சன், துரியோதனன் முதலியவர்கள் இதற்கு உதாரணம். வெறும் பொருளும் இன்பமும் சேர்ந்த வாழ்வு விலங்கின் வாழ்வு. 'அறம் மறையும்போது, பொருளிலும் இன்பத்திலும் சிக்கிய மனிதர்கள் நாய்களும் குரங்குகளும் போல இனக்கலப்பை (வர்ணஸங்கரத்தை)ப் பெறுகிறார்கள்.' என்கிறது ஸ்ரீமத் பாகவதம்.* ஹிந்து பண்பாடு பொருளையும் இன்பத்தையும் விட்டுவிடவில்லை. அவற்றுக்கும் தேவை உண்டு; ஆனால் அவை அறத்தைச் சார்ந்திருக்க வேண்டும். வால்மீகி ராமாயணத்தில் இராம பிரான் இளையபெருமாளிடம் சொல்கிறார்—

धर्मार्थकामाः खलु जीवलोके
समीक्षिता धर्मफलोदयेषु ।
ये तत्र सर्वे स्युरसंशयं मे
भार्येव वश्याभिमता सुपुत्रा ॥

यस्मिंस्तु सर्वे स्युरसंनिविष्टा
धर्मो यतः स्यात् तदुपक्रमेत ।
द्वेष्यो भवत्यर्थपरो हि लोके
कामात्मता खल्वति न प्रशस्ता ॥

(अयोध्या० २१ । ५७-५८)

---

* तदाऽऽर्यधर्मश्च विलीयते नृणां
वर्णाश्रमाचारयुतस्त्रयीमयः ।
ततोऽर्थकामाभिनिवेशितात्मनां
शुनां कपीनामिव वर्णसंकरः ॥

(श्रीमद्भा० १ । १८ । ४५)

'அறத்தின் பயனாகச் சுகபோகங்களைப் பெறுவதற்கு அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் வழிகளாகச் சொல்லப் பெறுகின்றன; இவை மூன்றும், அறம் என்ற ஒரே பொருளில் அடங்கியவை. அறத்தைக் கடைப்பிடிப்பதனால் இந்த மூன்றுமே கிடைத்துவிடுகின்றன என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை. கணவனுக்கு உட்பட்ட மனைவி, விருந்தினர்களை வரவேற்று உபசரிப்பது முதலியவற்றினால் அறத்திலும், உள்ளத்துக்குப் பாங்காக நடந்து கொள்வதனால் இன்பத்திலும், நன்மகனைப் பெறுவதனால் பொருளிலும் அவனுக்குத் துணையாகிறாள். அது போலத் தான் இதுவும். ஒரு செயலில் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் சேர்ந்திராமல், அறம் மட்டுமே அதனால் கைகூடும் என்றால், அந்தச் செயலையே செய்ய வேண்டும். அறத்தை விட்டுப் பொருளோடு பொருந்தியவர்களை மக்கள் பகைக்கிறார்கள்; இப்படியே இன்பச் சார்பும் புகழத் தக்கதன்று.'

'அறத்துக்குப் பகையாக இருக்குமானால், அந்தப் பொருளையும் இன்பத்தையும் அறவே விடுக' என்கிறார் மனு—

**परित्यजेदर्थकामौ यौ स्यातां धर्मवर्जितौ ।**

(४ । १७६)

அறம் என்பது—பேரறம் என்பதுதான் உண்மையில் எது? மனித வாழ்வு என்னும் வெள்ளத்தின் முனையை இறைவனிடம் திருப்பி, இடைவிடாத பெருக்குடன், சிறிதும் இங்குமங்கும் அலையாமல், எப்போதும் கடலை நோக்கி ஓடும் கங்கைப் பிரவாகத்தைப் போல வாழ்வு

வெள்ளத்தை அதே திசையில் எது செலுத்துகிறதோ அது தான் பேரறம்.*

मनोगतिरविच्छिन्ना यथा गङ्गाम्भसोऽम्बुधौ।

இவ்வாறே இறைவனுக்காகச் செய்யப்பெறும் பற்றற்ற அறஞ் சேர்ந்த வினைகளின் பயனாக, கட்டிலிருந்து விடுதலையும், தெய்விக உலகங்களில் இடமும், பரமாத்மனென்னும் பெருவீடாகிய பேறும், நிலையான அமைதியும் கிடைக்கின்றன.† வேதம் கூறுகிறது—

ईशावास्यमिदꣳ सर्वं यत्किञ्च जगत्यां जगत्।
तेन त्यक्तेन भुञ्जीथा मा गृधः कस्यस्विद् धनम्॥
कुर्वन्नेवेह कर्माणि जिजीविषेच्छतꣳ समाः।
एवं त्वयि नान्यथेतोऽस्ति न कर्म लिप्यते नरे॥

(शुक्लयजुर्वेद ४०। १-२)

---

*स वै पुंसां परो धर्मो यतो भक्तिरधोक्षजे।
अहैतुक्यप्रतिहता ययाऽऽत्मा सम्प्रसीदति॥ (श्रीमद्भा० १।२।६)

'காரணமின்றியும் இடையறாமலும் இறைவனிடம் பக்தி செலுத்துவதே, மனிதனுக்கு எல்லாவற்றிலும் அரிய பேரறமாகும். இத்தகைய பக்தியினால் அவன் ஸச்சிதானந்தனாகிய பரமாத்மனைப் பெற்று வாழ்வின் பயனை அடைகிறான்.'

†धर्म आचरितः पुंसां वाङ्मनःकायबुद्धिभिः।
लोकान् विशोकान् वितरत्यथानन्त्यमसङ्गिनाम्॥

(श्रीमद्भा० ४।१४।१५।)

'மனம், வாக்கு, உடல், அறிவு ஆகியவற்றினால் ஒருவன் அறம் செய்தானானால், அந்த அறம் அவனுக்குத் துயரற்ற தெய்விக உலகை அளிக்கிறது. அறம் செய்யும் அந்த மனிதன் சொர்க்கம் முதலிய உலகங்களின் சுகபோகத்தில் பிடிப்பற்றவனாக இருந்தால், அதே அறம் அவனை மோட்சத்துக்குக் கொண்டு செல்கிறது.'

'அகில உலகிலும் அசையும் பொருளாயும் அசையாப் பொருளாயும் புலப்படும் இந்தப் பிரபஞ்சம் அனைத்திலும் இறைவன் பரந்திருக்கிறான். அந்த இறைவனை உடன் கொண்டு, தியாகத்தோடு இன்பத்தை நுகர். இதில் பற்று வைக்காதே. யாருடைய செல்வத்தையும் விரும்பாதே. இந்த உலகில் இப்படி இறைவனுடைய உவகைக்காக வினைகளைப் புரிந்துகொண்டு நூறு ஆண்டுகள் வரைக்கும் வாழ விரும்பு. இங்ஙனம் தியாக உணர்ச்சியோடு செய்த வினைகள், மனிதனாகிய உன்னிடம் ஒண்டுவதில்லை. இதைத் தவிர வேறு வழி ஏதும் இல்லை.'

கண்ணபிரான் கீதையில் கூறுகிறான்—

यज्ञार्थात् कर्मणोऽन्यत्र लोकोऽयं कर्मबन्धनः ।
तदर्थं कर्म कौन्तेय मुक्तसङ्गः समाचर ॥

(३ । ९)

'வேள்வி (இறைவனு)க்காகச் செய்யும் வினைகளைத் தவிர வேறு வினைகளில் ஈடுபடுகிறவன், அந்த வினைகளில் கட்டுண்டு அடிமைத்தளையைப் பெறுகிறான். ஆதலினால், அர்ஜுனா, நீ பற்றற்றவனாகி அந்த வேள்வி (இறைவனு)க்காகவே செம்மையாகச் செயல்களைச் செய்.'

ஸ்ரீமத் பாகவதமும் சொல்லுகிறது—

कायेन वाचा मनसेन्द्रियैर्वा
बुद्ध्याऽऽत्मना वानुसृतस्वभावात् ।
करोति यद् यत् सकलं परस्मै
नारायणायेति समर्पयेत् तत् ॥

(११ । २ । ३६)

'உடல், வாக்கு, மனம், பொறி, உணர்வு, அகந்தை ஆகியவற்றினால் பல பிறப்புகளின் அல்லது ஒரு பிறப்பின் இயல்பினடியாக ஒருவன் என்ன என்ன செய்தாலும் அவற்றையெல்லாம், "இவை யாவும் பரம புருஷனான ஸ்ரீமந் நாராயணனுக்கே" என்ற கருத்தோடு அவனுக்கு அர்ப்பணம் செய்துவிட வேண்டும்.'

கீதையில் இறைவனே இப்படி அர்ப்பணம் செய்யக் கட்டளையிடுகிறான்—

यत् करोषि यदश्नासि यज्जुहोषि ददासि यत् ।
यत् तपस्यसि कौन्तेय तत् कुरुष्व मदर्पणम् ॥
(९ । २७)

'அர்ஜுனா, நீ எந்தச் செயல் புரிகிறாயோ, எதை உண்கிறாயோ, எதை வேள்வித் தீயில் இடுகிறாயோ, எதை நன்கொடையாகக் கொடுக்கிறாயோ, எந்தத் தவம் செய்கிறாயோ அந்த அந்த வினையையெல்லாம் எனக்கு அர்ப்பணம் செய்.'

இந்த அர்ப்பணத்துக்குப் பயனையும் பரமனே பணிக்கிறான்—

शुभाशुभफलैरेवं मोक्ष्यसे कर्मबन्धनैः ।
संन्यासयोगयुक्तात्मा विमुक्तो मामुपैष्यसि ॥
(९ । २८)

'இவ்வாறு எல்லா வினைகளும் இறைவனான என்னிடம் அர்ப்பணமாகிவிட்டால், பற்றறுத்த நிலையாகிய துறவு நெறியோடு கூடிய மனம் வாய்ந்த நீ, நல்லனவும்

தீயனவுமான வினைகளின் கட்டிலிருந்து விடுபடுவாய்; அவற்றிலிருந்து விடுபட்டு என்னைப் பெறுவாய்.'

ஹிந்து பண்பாட்டின் சிறப்பான இயல்பு, அடிப்படையான இயல்பு இதுதான். இந்தப் பண்பாடு ஜீவனை உலகப்பற்று என்னும் தாழ்ந்த தரத்திலிருந்து உயர்த்தி, ஆன்ம தரிசனம் என்னும் மேன்மையான தரத்துக்குக் கொண்டு செல்கிறது. இதன் ஒவ்வொரு சாதனமும் சிந்தனையும் செயலும் ஆன்மாவைப் பரமான்மா வரைக்கும் கொண்டு செல்லத் துணையாக நிலவுகிறது.

## அறமும் சமப் பங்கீடும்

முக்தியே வாழ்வின் நோக்கம். ஆதலினால் ஹிந்து பண்பாட்டில் அறத்துக்கும் வாழ்க்கைக்கும் இடையறாத தொடர்பு உண்டு. சின்னஞ்சிறிய செயலிலிருந்து மா பெருஞ் செயல் வரைக்கும் எதிலும் எப்போதும் அறம் இணைந்தே இருக்கும். இறைவனிடம் பக்தியே பேரறமாகும். ஆனால் அதனோடு பின்னும் சில இலக்கணங்களை அறத்துக்குச் சொல்லியிருக்கிறார்கள். இவை எல்லாருக்குமே பெரும் பயன் அளிப்பவை. மனுவின் மணிமொழி இது—

> वेदः स्मृतिः सदाचारः स्वस्य च प्रियमात्मनः ।
> एतच्चतुर्विधं प्राहुः साक्षाद्धर्मस्य लक्षणम् ॥
>
> (२।१२)

'மறைகள் மொழிந்தது, ஸ்மிருதிகள் விளக்கியது, நல்லவர்கள் நடைமுறையில் கண்டது ஒவ்வொருவனுக்

கும் தனக்குப் பிரியமானது *—இப்படி நான்கு வகை யான வெளிப்படை இலக்கணங்களை அறத்துக்குச் சொல்லியிருக்கிறார்கள்.'

धृतिः क्षमा दमोऽस्तेयं शौचमिन्द्रियनिग्रहः ।
धीर्विद्या सत्यमक्रोधो दशकं धर्मलक्षणम् ॥
(मनु० ६ । ९२)

'துணிவு, பொறுமை, மன அடக்கம், கள்ளாமை, தூய்மை, புலனடக்கம், விஞ்ஞானம், ஆன்ம அறிவைக் கொடுக்கும் கல்வி, வாய்மை, வெகுளாமை—ஆகிய இவை பத்தும் அறத்தின் இலக்கணங்கள்.'

ஸ்ரீமத் பாகவதம் இந்த மனித தர்மத்தை முப்பது இலக்கணங்களால் வகுத்துரைக்கிறது—

---

* நம்மிடம் பிறர் எப்படி நடந்துகொண்டால் நாம் உவப்போமோ அப்படியே பிறரிடமும் நாம் நடந்துகொள்ள வேண்டும். மதிப்பு, அன்பு, நன்மை, பகையும் ஆடம்பரமுமற்ற நல்லொழுக்கம் ஆகியவை நமக்குப் பிடிக்கின்றன என்றால் பிறருக்கும் அவை தோன்றும் படியாக நமது நடவடிக்கை அமைய வேண்டும். விஷ்ணுதர்மோத்தர புராணம் கூறுகிறது—

श्रूयतां धर्मसर्वस्वं श्रुत्वा चाप्यवधार्यताम् ।
आत्मनः प्रतिकूलानि परेषां न समाचरेत् ॥
(३ । २५३ । ४४)

'அறத்தின் தேறிய பொருளைக் கேட்டு அதை நெஞ்சில் கொள்ள வேண்டும். நமக்கு வேண்டாததைப் பிறருக்குச் செய்யலாகாது.'

सत्यं दया तपः शौचं तितिक्षेक्षा शमो दमः ।
अहिंसा ब्रह्मचर्यं च त्यागः स्वाध्याय आर्जवम् ॥
संतोषः समदृक् सेवा ग्राम्येहोपरमः शनैः ।
नृणां विपर्ययेहेक्षा मौनमात्मविमर्शनम् ॥
अन्नाद्यादेः संविभागो भूतेभ्यश्च यथार्हतः ।
तेष्वात्मदेवताबुद्धिः सुतरां नृषु पाण्डव ॥
श्रवणं कीर्तनं चास्य स्मरणं महतां गतेः ।
सेवेज्यावनतिर्दास्यं सख्यमात्मसमर्पणम् ॥
नृणामयं परो धर्मः सर्वेषां समुदाहृतः ।
त्रिंशल्लक्षणवान् राजन् सर्वात्मा येन तुष्यति ॥
(७ । ११ । ८-१२)

'வாய்மை, இரக்கம், தவம், தூய்மை, பொறுமை, தகுந்தது தகாதது பற்றிய சிந்தனை, மன அடக்கம், புலனடக்கம், அஹிம்சை, பிரம்மசரியம், தியாகம், வேதப் பயிற்சி, கபடமின்மை, திருப்தி, சமநோக்கு, பெரியோர்களுக்குத் தொண்டு, மெல்ல மெல்ல உலக இன்பங்களிலிருந்து விலகுவது, மனிதன் தான் என்ற செருக்கோடு செய்யும் முயற்சிகள் மாறான பயனை அடைகின்றன என்னும் அறிவு, மௌனம், ஆத்மசிந்தனை, உணவு முதலிய பொருள்களை உயிர்களுக்கு ஏற்றபடி பங்கிடுதல், அந்த உயிர்கள் யாவற்றையும்—அதிலும் சிறப்பாக மனிதர்களைத் தன் ஆத்மாவாகவும் இஷ்ட தெய்வமாகவும் மதிப்பது, அடியார்களின் பெருமையையும் இறைவனுடைய உயர் நலங்களையும் கேட்பது போற்றுவது நினைப்பது, தொண்டு செய்து அவர்களை வழிபடுவது, அடிமையும் நட்பும் பூண்டு தன்னை அவர்களுக்கு உரிமையாக்குவது—

இவை யாவும் மனிதர்களுக்குப் பேரறமாம். முப்பது இலக்கணங்களையுடைய இந்த அறத்தைக் காப்பதனால் அனைத்துயிர்க்கும் உயிராகிய இறைவன் மகிழ்கிருன்.'

இந்த இலக்கணங்களைச் சிந்தித்துப் பாருங்கள். அறத்துக்கு இந்த இலக்கணங்களை வகுத்துள்ள பண்பாட்டைக் கடைப்பிடித்தால் உலகில் எந்த உயிர்தான் ஆகட்டும், ஏன் துன்புறும்? மனிதனிடம் மட்டுமல்லாமல் எல்லா உயிர்களிடத்திலும் தன்னையோ இஷ்ட தெய்வத்தையோ காண்பதும், உணவு முதலிய பண்டங்களை எல்லா உயிர்களுக்கும் சமமாக அவ்வவற்றுக்கு ஏற்றபடி பங்கிடுவதும்—ஆகிய இதை விடச் சிறந்த சமப் பங்கீடு வேறு என்ன இருக்க முடியும்?

கண்ண பெருமான் கீதையில் இந்த அளவுக்குச் சொல்லிவிட்டான்—

यज्ञशिष्टाशिनः सन्तो मुच्यन्ते सर्वकिल्बिषैः ।
भुञ्जते ते त्वघं पापा ये पचन्त्यात्मकारणात् ॥

(३ । १३)

'வேள்வியில் எஞ்சிய உணவை உட்கொள்ளும் உயர்ந்த மாந்தர் எல்லாப் பாவங்களினின்றும் விடுபடுகிருர்கள்; ஆனல் எந்தப் பாவிகள் தம் உடலை வளர்ப்பதற்கென்றே சோற்றைச் சமைக்கிருர்களோ அவர்கள் (சோற்றுக்குப் பதிலாக) பாவத்தையே தின்கிருர்கள்.'

இதனல்தான் ஹிந்துவின் வீட்டில் நாள்தோறும் பஞ்ச மகா யக்ஞம் நடக்கிறது. உலகில் ஐவகையான உயிர்கள் இருக்கின்றன; அவற்றின் பரஸ்பர ஒத்துழைப்

பிஞல் எல்லாம் பெருகி வளர்ந்து மகிழ்கின்றன. இவை ஐந்தாவன—தெய்வம், முனிவர், தென்புலத்தார் (பித்ருக்கள்), மனிதன், மற்ற எல்லா உயிரினம். தெய்வங்களிடமிருந்து (நிலம், நீர், காற்று, ஒண்சுடர், வெண்மதி முதலியவற்றின் வாயிலாக) உலகுக்கு வேண்டிய சுகபோகங்கள் கிடைக்கின்றன. முனிவர்களிடமிருந்து அறிவு கிடைக்கிறது. தென்புலத்தாரிடமிருந்து பாதுகாப்பும் வளர்ச்சியும் நன்மை செய்யும் நல்லெண்ணமும் கிடைக்கின்றன. மனிதர்கள் தங்கள் தங்கள் செயலினடியாக ஒருவருக்கு ஒருவர் பணிபுரிகிருர்கள். இவ்வாறே விலங்குகளும் பறவைகளும் மரஞ்செடிகொடிகளும் பிறவும் அனைத்துலகின் இன்பத்துக்குத் தம்மை எப்போதும் உரியனவாக்கிக் கொண்டு வாழ்கின்றன. இந்த ஐந்தில் மனிதன் சிறப்பாகத் தகுதியும் சாதனங்களும் வாய்ந்தவன். அதஞல்தான், அனைத்தையும் பேணி வளர்க்கும் பொறுப்பு மனிதனுக்கு இருக்கிறது. செயலாற்றும் உரிமை அவனுக்குத்தான் உண்டு; ஆகையால், அவன் எதைச் சம்பாதித்தாலும் அதில் எல்லா உயிர்களுக்கும் பங்கு உண்டு என்பதை அறிந்து கொள்ள வேண்டியது அவன் கடமை. காரணம், அனைத்துயிரின் ஒத்துழைப்பிஞலும் அவன் பொருளீட்டுகிருன், உண்கிருன், வாழ்கிருன். ஆகையிஞல்தான் வேள்வியில் எஞ்சிய உணவை, அதாவது இந்த ஐந்துக்கும் அவ்வவற்றுக்கு உரிய பகுதிகளைப் பகிர்ந்து கொடுத்த பின்பு எஞ்சியதை எவன் உண்கிருனே அவன் அமுதம் உண்பவஞகிருன். ஆஞல், தன் சம்பாத்தியத்திலிருந்து பிறருக்குத் தகுந்த பகுதியை அவர்களுக்குக் கொடுக்காமல் அனைத்

தையும் தான் ஒருவனுகவே விழுங்கிவிடுகிறவன் பாவத்தைத் தின்கிருன்.

இந்தக் காலத்தில் சிலர், 'மக்களுக்குச் சோறும் துணியும் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே நாங்கள் ஸோஷியலிஸம் வேண்டுகிருேம். ஹிந்து பண்பாட்டில் இந்தச் சோற்றுக்கும் துணிக்கும் எவ்வகையான ஏற்பாடும் இல்லே' என்கிருர்கள். ஆனுல் இப்படிப் பேசுகிறவர்கள் ஹிந்து பண்பாட்டின் இயல்பை அடியோடு அறியாதவர்கள். உண்மையான விஷயம் என்னவென்ருல், சோற்றுக்கும் துணிக்கும் ஹிந்து பண்பாட்டில் இருக்கும் ஏற்பாடு வேறு எங்குமே இல்லே. வேறு இடங்களில் சில அரைகுறையான ஏற்பாடுகள் இருந்தாலும் அவை அந்தக் குறிப்பிட்ட நாட்டின் எல்லேயோடு தங்கிவிடுகின்றன. இந்த ஏற்பாடுகளும் வெறும் மனிதர்களுக்கு மட்டுந்தான்; அதுவும் அந்த நாட்டினரின் மதத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான்; ஆனுல் ஹிந்து பண்பாட்டிலுள்ள இந்த ஏற்பாடு அனேத்துயிருக்கும் பொதுவானது. ஒவ்வோர் உயிரையும் இறைவனுக மதித்துத் தொண்டு செய்வதே இந்த நாட்டுப் பெரியோர் இட்டிருக்கும் கட்டளே. 'உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்.'

सो अनन्य जाकें असि मति न टरइ हनुमंत।
मैं सेवक सचराचर रूप स्वामि भगवंत॥

உலக விவகாரத்தில் நமக்கு எல்லாவற்றையும் விட மிகுந்த பரிவு நம்முடைய மக்களிடந்தான் இருக்கிறது. தேவரிஷி நாரதர் தர்ம புத்திரரான யுதிஷ்டிரரிடம் சொல்லுகிருர்—

178028

मृगोष्ट्रखरमर्काखुसरीसृपखगमक्षिकाः ।
आत्मनः पुत्रवत् पश्येत् तैरेषामन्तरं कियत् ॥
(श्रीमद्भा० ७।१४।९)

'மான், ஒட்டகம், கழுதை, குரங்கு, எலி, பாம்பு, பறவை, ஈ முதலியவற்றை உன் சொந்த மக்களைப் போல் எண்ணிக்கொள். இவற்றுக்கும் உன் மக்களுக்கும் எந்த அளவில் வேற்றுமை இருக்கிறது?'

உயிரனைத்துக்கும் அபயம் தருவதோடு மட்டுமல்லாமல் உண்மையான நட்பும், எல்லாவற்றுக்கும் தகுதிக்கு ஏற்ற பங்கீடும் ஆகிய நல்ல ஏற்பாட்டை உடைய இந்தப் பண்பாடு எவ்வளவு தாராள மனப்பான்மை கொண்டது! இந்தக் காலத்திலோ, 'அதிக உணவு உற்பத்தி' செய்யும் வெறியில் குரங்குகளையும் மான்களையும் போன்ற விலங்குகளைக் கூட்டங் கூட்டமாகக் கொல்லும் அரக்க இயக்கந்தான் நடைபெறுகிறது. தன்னலம் மிகுந்த மனிதன் இன்று எவ்வளவு மட்டமான தரத்துக்கு வந்துவிட்டான்! இதில் ஆச்சரியம் என்னவென்றால், குரங்குகளைக் கொன்று குவிக்கும் இந்தப் பேர்வழிகளுக்கு, உயிரனைத்துக்கும் புகல் தந்து சமநோக்கு நிரம்பிய தாராள மனப்பான்மையுள்ள ஹிந்து பண்பாட்டில் குறுகிய வகுப்புவாதத்தின் மணம் வீசுகிறதாம்! இந்தப் பண்பாட்டைப் பழிப்பதில் அவர்கள் இன்பம் காண்கிறார்கள்!

## சமத்துவம்

ஹிந்து பண்பாட்டில் சமத்துவம் என்பது பகுத்தறிவுக்கு ஏற்றதாக அமைந்திருக்கிறது. சமத்துவம் என்

பது ஆத்மாவில்தான்; உடல் விவகாரத்தில் அன்று என்பதை ஹிந்துக்கள் அறிவார்கள். ஹிந்து தத்துவஞானிகளின் அநுபவம் இதுதான்–இயற்கையின் மாறுபாட்டிலே தான் படைப்பு நிலைநிற்கிறது. இயற்கையின் மாறுபாடு மறையும் இடத்திலே, உலகின் இருப்பும் மறைந்துவிடுகிறது. இயற்கைத் தேவி பரமான்மனுக்குள் புகுந்து துயிலும் நிலையே பெரும் பிரளயமாகும்.

இதனால்தான் ஹிந்து அறிஞர்கள், வடிவிலும் உணவிலும் நடவடிக்கையிலும் ஒருபொழுதும் சமத்துவமே இருக்க முடியாத உயிர்களிடத்திலுங்கூடப் பரப்பிரம்மமான பரமாத்மா சமநிலையோடு விளங்குவதைக் காண்கிறார்கள். கீதையாசிரியன் பேசுகிறான்—

विद्याविनयसम्पन्ने ब्राह्मणे गवि हस्तिनि।
शुनि चैव श्वपाके च पण्डिताः समदर्शिनः॥

(गीता ५ । १८)

'அந்த அறிஞர்கள் கல்வியும் வணக்கமும் வாய்ந்த அந்தணனிடத்தும் புலையனிடத்தும் அங்ஙனமே பசுவினிடத்தும் யானையினிடத்தும் நாயினிடத்துங்கூடச் சம நோக்குடையவர்களாக விளங்குபவர்கள்.'

இந்த இடத்தில் சிலர், 'அந்தணன், புலையன் இருவரும் மனிதர்கள் தாமே? இவர்களிடம் சமநோக்கு மட்டுமன்று, சமமான நடவடிக்கையுங்கூட இருக்கக் கூடுமே' என்று சொல்லலாம். (இது நடைமுறையில் இயலாது என்றாலும்) அவர்களுக்கு நாம் கொடுக்கும் விடை— மனிதனைப் பொறுத்த வரைக்கும் இது சரிதான்; ஆனால்

பசு, யானை, நாய் இவற்றோடும் சமமாகப் பழகுவதுபற்றி எப்போதாயினும் நினைத்துப்பார்க்க முடியுமா? பசுவின் பாலை மக்கள் ஆவலோடு குடிக்கிறார்கள்; நாய்ப் பாலை யாரும் குடிப்பதில்லை; யானைமேல் ஏறுவதை மக்கள் பெருமையாக மதிக்கிறார்கள்; நாயின் மேல் யாரும் சவாரி செய்வதில்லை. யானை ஒரு நாளில் தின்னும் தீனியின் அளவுக்குள் நாய் நசுங்கிச் செத்துப் போகும். யானை, நாய், பசு இவற்றின் அளவிலும் வடிவிலுங்கூட நிறைய வேற்றுமை உண்டு. இந்த நிலையில் இவற்றோடு சம நடவடிக்கை வேண்டும் என்று பேசுவது பைத்தியக்காரத்தனமே. ஆனால், நடவடிக்கையில் வேறுபாடு இருந்தாலுங்கூட, உயிரனைத்திலும் ஒரே ஆன்மா—ஒரே இறைவன் எப்பொழுதும் விளங்குவதை ஹிந்து காண்கிறான். அவன் அந்தணனிடம் அந்தணனுக்கு ஏற்பவும், புலையனிடம் புலையனுக்கு ஏற்பவும், இங்ஙனம் பசு, யானை, நாய் இவற்றோடு இவற்றுக்கு ஏற்பவும் பழகுகிறான்; ஆனால் இவையனைத்திலும் அவன் எப்பொழுதும் ஒரே இறைவனைக் காண்பதனால், எந்தப் பொருளோடும் தீய முறையில் பழகுவதில்லை; பழக்கத்தின் இந்த வேற்றுமையினால் அவனுடைய அன்பும் பரமாத்ம பாவனையும் துளியும் குறைவதில்லை.

மனிதன் தன் தலை, கை, கால் முதலிய உறுப்புக்களில் சமமான ஆத்மப்பான்மையைக் காண்கிறான்; ஆனால் அவற்றோடு பழகுவதில் வேற்றுமை கொள்கிறான். உதாரணமாக, மூளையினால் சிந்திக்கிறான்; வாயினால் உண்கிறான், பேசுகிறான்; கைகளினால் வாங்குகிறான், கொடுக்கிறான்,

எழுதுகிறான்; கால்களினால் நடக்கிறான். ஓர் உறுப்பின் வேலையை மற்றோர் உறுப்பைக் கொண்டு வாங்கிக்கொள்வதில்லை; ஏனென்றால் அது முடியாது என்பது அவனுக்குத் தெரியும். ஆனால் அவன் எல்லாவற்றின் இன்ப துன்பங்களையும் சமமாக அநுபவிக்கிறான்; உடல் முழுவதிலும் சம அன்பு கொள்கிறான். இதுபோலவே, நடைமுறையில் வேற்றுமை வைத்துக்கொண்டிருந்தாலும் ஹிந்து ஒவ்வோர் உயிரோடும் ஆன்ம உறவுடன் எப்பொழுதும் சம நிலையில் கூடியிருக்கிறான்; அவன் தன் சொந்த யோக க்ஷேமத்துக்கும் நன்மைக்கும் முயல்வது போலவே பிற உயிர்களுக்காகவும் பாடு படுகிறான்.

இதையே பரமன் பணித்திருக்கிறான்—

**आत्मौपम्येन सर्वत्र समं पश्यति योऽर्जुन।**
**सुखं वा यदि वा दुःखं स योगी परमो मतः॥**

(६ । ३२)

'அர்ஜுனனே, தன்னைப் போலவே எல்லா உயிர்களிடத்தும் (ஆன்மாவில்) ஒற்றுமையைக் காண்பவனும், இன்பத்தையோ துன்பத்தையோ கூட எல்லாவற்றிலும் சமமாகக் காண்பவனுமாகிய யோகியே மிகச் சிறந்த யோகி என்று மதிக்கப்பெறுகிறான்.'

எங்காவது யாருடனாவது எப்பொழுதாவது நடைமுறையில் போர் போன்ற கொடுமையான செயலைச் செய்ய வேண்டியிருந்தால், அது மனிதன் தன் அழுகிப்போன உறுப்பின் நோயை நீக்குவதற்காக ஆபரேஷன் செய்து கொள்வது போல. கீதையில் பகவான் அர்ஜுனனுக்கு

அங்கங்கே போருக்கு உத்தரவிடுகிருர். ஆனல் அதனேடு கூடவே, 'அரசில் விருப்பங்கொண்டு வேட்கையுற்றுப் பற்றுடன் அகந்தைக்கு வசமாகிப் போர் செய்யாதே. போரை என் கட்டளையாக எண்ணி, எனக்காக, என் மகிழ்ச்சிக்காக, என் செயல் என்று மதித்துச் செய்' என்று சொல்கிருர். இத்தகைய கொடுமையான செயலிலுங் கூடப் பற்று இருக்கலாகாது, யாருடனும் பகை இருக்கலாகாது; கடவுளிடம் ஈடுபாடும், கடவுளிடம் பக்தியும், கடவுள் செயலுமே இருக்க வேண்டும். இதற்குத்தான் 'அநந்ய பக்தி' என்று பெயர். இதனலேயே கடவுளைக் கிட்ட முடியும்.*

ஹிந்து பண்பாட்டில்தான் இந்தச் சிறப்பு இருக்கிறது. வேற்றுமையிலும் சமத்துவத்தைக் கண்டு, கொடுமையான செயல்களிலும் பற்றற்று, பகையற்று, அவற்றைக் கடவுள் செயலாக்கி, அவற்ருேடு பக்தியையும் கடவுள் ஈடுபாட்டையும் கலக்கும் திறமையை இந்தப் பண்பாட்டிலேதான் பெற முடியும்.

---

* मत्कर्मकृन्मत्परमो मद्भक्तः सङ्गवर्जितः ।
निर्वैरः सर्वभूतेषु यः स मामेति पाण्डव ॥
(गीता ११ । ५५)

'அர்ஜுன, எவன் எனக்காகவே செயலாற்றுகிருனே, என்னிடம் ஈடுபட்டிருக்கிருனே, என் பக்தனே, பற்றற்றவனுக இருக்கிருனே, எல்லா உயிர்களிடத்தும் பகையற்றவனுய் வாழ்கிருனே அவன் (அநந்ய பக்தியுடையவன்) என்னை (பகவானை)யே அடைகிருன்.'

நடைமுறையில் பல வகையாக உள்ளவற்றில் தத்துவ முறையில் ஒற்றுமையையும், இயற்கையினால் உலகில் உண்டாகியிருக்கும் வேற்றுமையில் இறைவனுடைய நித்தியமான சமத்துவத்தையும் காண்பதே ஹிந்து பண்பாட்டின் சிறப்பாகும். 'இந்த உலகனைத்தும் ஒரே இறைவனிடமிருந்து உண்டாகியிருக்கிறது; அவனிடமே நிலைத்திருக்கிறது; அவனிடமே அடங்கிவிடுகிறது' என்பதை இந்தப் பண்பாட்டில்தான் அநுபவ பூர்வமாக எடுத்துரைத்திருக்கிறார்கள்.

**यतो वा इमानि भूतानि जायन्ते येन जातानि जीवन्ति। यत् प्रयन्त्यभिसंविशन्ति। तद् ब्रह्म।** (तैत्तिरीय० ३।१।१)

இங்ஙனமே எல்லாவற்றிலும் உறைந்திருக்கும் இந்த இறைவனைத் தனக்குரிய செயல்களால் வழிபட்டு, மனிதன் வாழ்வில் மிக உயர்ந்ததும் கடைசியுமான வெற்றியைப் பெற முடியும்.*

## வர்ண தர்மம்

தத்தம் வினைகளுக்கு ஏற்றவாறு ஜீவன்கள், இறைவனுடைய திட்டத்தின்படி, ஏதாவது ஒரு வர்ணத்தில் (அல்லது உயிர்ப்பிறவியில்) பிறக்கின்றன. அந்த அந்த

---

* यतः प्रवृत्तिर्भूतानां येन सर्वमिदं ततम्।
स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः॥
(गीता १८।४६)

'எவனால் எல்லா உயிர்களும் தோன்றியுள்ளனவோ, எவன் இந்த உலகனைத்தும் பரந்திருக்கிறானோ அந்த இறைவனைத் தனக்கு இயல்பான செயல்களினால் வழிபட்டு மனிதன் வாழ்வின் பயனாகிய பெரும் பேற்றைப் பெறுகிறான்.'

ஜீவனுடைய இயல்பான வினைகளுக்குத் 'தன் கருமம்' (ஸ்வகர்மம்) என்று பெயர். வர்ண தர்மம் என்பது இது தான். வர்ண தர்மத்தில் எல்லாருக்கும் வெவ்வேறு வகையில் செயல்கள் ஏற்பட்டிருக்கின்றன. வர்ண தர்மத்தின் படி, ஒருவன் தான் பிறந்த வர்ணம் அல்லது சாதியின் பரம்பரைத் தொழில் எதுவோ அதையே ஏற்றுக் கொண்டு அதிலேயே திருப்தி பெறுவதும், அதில் தனக்குக் கிடைக்கும் ஊதியத்தைத் தக்க முறையில் சமூகத்துக்குப் பகிர்ந்து கொடுப்பதுமே அவனுடைய கடமைகள். பிறவியிலிருந்தே தொழில் ஏற்பட்டுவிடுவதனுல், யாருக்கும் எப்பொழுதும் போட்டி மனப்பான்மை வருவதில்லை; ஒருவன் மற்றவனுடைய பிழைப்பைப் பறிக்கவும் முயலுவதில்லை. இதைத் தவிர, வம்ச ப்ரம்பரையாகப் பிழைப்புக்குக் கருவியாக இருக்கும் தொழில்களில் அந்தக் குலத்தவர்கள் இயல்பிலேயே நிபுணர்களாகி விடுகிறுர்கள். அந்தத் தொழில் பற்றிய உணர்ச்சிகள் அவர்களுடைய ரத்த மாமிசத்தோடு ஊறி வருகின்றன. ஆதலால் அவர்களுடைய தொழில் மிகவும் அழகாகவும் செம்மையாகவும் நிறைவேறுகிறது.

ஆத்மாவின் கண்கொண்டு பார்க்கும்போது வர்ணங்களுக்குள் எவ்வகையான வேற்றுமையும் இல்லை; தொழில் வேற்றுமையின் அடியாக அவற்றுக்குள் ஏற்றத்தாழ்வும் ஏதுமில்லை. அவரவர் இடத்தில் எல்லாருக்கும் சமமான பெருமை உண்டு. எல்லாருமே ஒருவரை ஒருவர் சார்ந்தவர்கள்; ஒருவருக்கு மற்றவர் நிறைவும் துணையும் தருபவர்கள்; எல்லாருக்கும் தத்தம் இடத்தில் தனியே பயன்

உண்டு. அந்தணன் அறிவின் வலிமையினாலும், க்ஷத்திரியன் தோள்வலிமையினாலும், வைசியன் பொருள் வலிமையினாலும், பணியாள் மக்கள் வலிமையினாலும் தொழில் வலிமையினாலும் பெருமையடைகிறான். இது இவர்களுக்கு இயல்பான சொந்தத் தருமம் (ஸ்வதர்மம்). ஒரே இறைவனுடைய தெய்விகத் திருமேனியிலிருந்து இவர்கள் தோன்றியிருக்கிறார்கள். அந்தணன் இறைவனுடைய முகத்திலிருந்தும், க்ஷத்திரியன் தோளிலிருந்தும், வைசியன் துடையிலிருந்தும், பணியாள் திருவடிகளிலிருந்தும் தோன்றியவன்.

**ब्राह्मणोऽस्य मुखमासीद् बाहू राजन्यः कृतः ।**
**ऊरू तदस्य यद् वैश्यः पद्भ्यां शूद्रो अजायत ॥**

(ऋग्वेद १० । ९० । १२)

இவர்கள் யாவரும் தத்தம் செயலைச் செம்மையாகச் செய்தார்களானால் அடுத்த பிறவிகளில் அவர்கள் உயர் வர்ணத்தவர்களாகிறார்கள். ஒரு நாடகக் கழகத்தில் ஒரு நடிகன் தன் பொறுப்பிலுள்ள பாத்திரத்தை வெற்றியோடு அபிநயித்து நடித்தால் அவனுக்கு வேறொரு சிறந்த பாத்திரத்தின் நடிப்பு அடுத்தபடி கிடைப்பது போல, இந்த உலக நாடகத்தில் வெற்றி எய்திய நடிகனுக்கு மறு பிறப்பில் உயர்ந்த வர்ணம் கிடைக்கிறது.

## செயலும் மறுபிறப்பும்

ஹிந்து பண்பாட்டில் 'செயல்', 'மறுபிறப்பு' என்னும் கொள்கை நடைமுறையில் கண்கூடாக ஒப்புக் கொள்ளப் பெறுகிறது. செயலின் பயனைக் கட்டாயம்

அநுபவித்தே தீர வேண்டும்; செயலுக்குத் தக்கபடி மறு பிறப்புக் கிடைக்கிறது; எதுவரைக்கும் இறைவன் பேறு அல்லது மோட்சம் கிடைக்கவில்லையோ அதுவரைக்கும் இந்த ஜனன மரண வெள்ளம் ஓடிக்கொண்டே இருக்கும். செத்த பிறகு கருமத்தினடியாக ஜீவன், சூட்சுமமான உடலைப் பெற்று ஒளிமயமான தெய்விக உடலோடு சொர்க்கம் முதலிய உலகங்களுக்கோ, அல்லது காற்று மயமான பித்ரு-பிரேதாதி உடலோடு பித்ரு-பிரேதாதி உலகங்களுக்கோ போகிறுன்; ஆனுல் இந்தக் கொள்கையில், முடிவற்ற காலத்துக்குச் சொர்க்கமோ நரகமோ கிடையாது. சொர்க்கம் அல்லது நரகம் முதலியவற்றின் இன்ப துன்பங்களை நுகர்ந்துவிட்டு, ஜீவன் மீண்டும் தன் கருமத்தினடியாக நல்ல அல்லது கெட்ட பிறவிகளில் பிறப்பெய்துகிறுன்.

மனிதன் செயலாற்றுவதற்குச் சுதந்திரன்; பயனில் பரதந்திரன். விலக்கிய கருமங்களைச் செய்வதனுல், இருள் மயமானவையும் துன்பந்தருபவையுமான நரகம் முதலிய உலகங்களும், தாழ்ந்தவையான விலங்கு பறவை முதலிய பிறவிகளும் கிடைக்கின்றன. தூய கடமைகளான நற்கருமங்களின் பயனுக இன்பமயமான சொர்க்கம் முதலிய உலகங்களும், உயர்ந்த சிறந்த வர்ணத்தில் மனிதப் பிறவியும் கிடைக்கின்றன. சாந்தோக்ய உபநிஷத் சொல்லுகிறது—

**रमणीयचरणा ..रमणीयां योनिमापद्येरन् ब्राह्मणयोनिं वा क्षत्रिययोनिं वा वैश्ययोनिं वा......कपूयचरणा...कपूयां योनिमापद्येरन् श्वयोनिं वा सूकरयोनिं वा चण्डालयोनिं वा ।**

(५ । १० । ७)

'அந்த ஜீவன்களுக்குள் நல்லொழுக்க முடையவர்கள் விரைவில் சிறந்த பிறவிகளைப் பெறுகிறார்கள். அவர்கள் அந்தணப் பிறவி, க்ஷத்திரியப் பிறவி அல்லது வைசியப் பிறவிகளை எய்துகிறார்கள். தீயொழுக்க முடையவர்கள் உடனே அசுபப் பிறவிகளைப் பெறுகிறார்கள். அவர்கள் நாய்ப் பிறவி, பன்றிப் பிறவி அல்லது புலையப் பிறவிகளை எய்துகிறார்கள்.'

## ஆசிரம தர்மம்

வர்ண எற்பாட்டைப் போலவேதான் ஹிந்து பண்பாட்டில் ஆசிரம எற்பாடும் இருக்கிறது. தியாகந்தான் ஹிந்து பண்பாட்டின் லட்சியம்; போகம் அன்று. உலகில் துச்சமானவையும், அற்பமானவையும், எல்லையுள்ளவையும், துன்பம் கலந்தவையுமான போகங்களில் பற்று வைக்காமல் வாழ்க்கையைத் தியாகமயமாக்குவதுதான் இதில் மேன்மையான விஷயம். ஹிந்து பண்பாட்டில் இயல்பாகவே போகியைக் காட்டிலும் தியாகியின் இடம் உன்னதமானது. பெரிய முடிமன்னனுங் கூட, தியாகிகளான பெரியோர்களின் திருவடித் தூளியைத் தலையில் தரிப்பதைத் தன் பெரும் பாக்கியமாக மதிக்கிறான். எவனிடம் எவ்வளவு அதிகமான செல்வமும் சொத்தும் இருக்கின்றன என்னும் விஷயத்துக்கு எவ்வகையான பெருமையும் இல்லை. எவன் எவ்வளவு பெரிய தியாகி என்பதுதான் பெருமைக்குரிய விஷயம். மேல் நாட்டினரின் கூட்டுறவினால் பாரத நாடு இந்தத் தியாகத்தின் பெருமையை மறந்து, தன் பண்பாட்டுக் கொள்கைகளுக்கு மாறாகச் செல்வத்திலும் போகத்திலும் பித்துக் கொண்ட நாளிலிருந்து

தான், அது வெறும் பொருளையும் பதவியையுமே வாழ்க்கை லட்சியமாகக் கொண்டு அவற்றின் மீதே கருத்தைச் செலுத்தியது; அந்த நாளிலிருந்துதான் தீய பழக்கம், தீய ஒழுக்கம், திருட்டு, புரட்டு, கள்ளங்கபடு, கள்ளச் சந்தை, லஞ்சம் முதலிய தீமைகள் வந்தன. தியாகத்தின் பெருமையை உண்மையாக உணரும் பொழுதுதான் இவை இந்த நாட்டை விட்டு நீங்கும்.

178028

நமது ஆசிரம தர்மத்தில் ஆரம்பத்திலிருந்தே தியாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 'பிரம்மசரிய ஆசிரம'த்தில் அரசகுமாரனும் ஓர் ஏழைப் பையனைப் போலவே குருகுலத்தில் வாழ்கிறான். அங்கே ஒவ்வொருவனும் இயல்பாகவே கேளிக்கைகளை—புலன்களின் சுகபோகங்களைத் தியாகம் செய்து, மனத்தையும் புலன்களையும் அடக்க வேண்டும். தியாகத்தின் இந்த முதல் மலையைத் தாண்டி அவன் 'கிருஹஸ்த ஆசிரம'த்திற்கு வந்ததும், இங்கே அவன் போகங்களில் இருந்துகொண்டே தியாகியாக வேண்டும். அவன் பணம் சம்பாதிக்கிறான், ஆனால் தனக்காக அன்று; முழுச் சமூகத்துக்காக, உலகத்துக்காக—இறைவனுக்காக. மகவைப் பெறுகிறான், ஆனால் தனக்காக அன்று; சமூகத்துக்காக, அறத்துக்காக, இறைவனுக்காக. அவன் மன அடக்கமும் புலனடக்கமும் வாய்ந்தவனாக இருக்கிறான். அவன் சமூகம் முழுமைக்கும் சேவகனாக இருக்கிறான். மூன்று ஆசிரமங்களுக்கும் உயிரனைத்துக்கும் புகலாக இருக்கிறான். எல்லாருக்கும் தொண்டு செய்து அருளுருவத்தில் கிடைக்கும் பொருளை அவன் அமுதமாக மதித்துத் தன் செயலையாற்றுகிறான். இந்த ஆசிரமத்தில்

பெரிய பொறுப்புள்ள செயல் நிறைந்த ஒரு பகுதியை நிறைவேற்றிய பின், அவன் நல்ல தகுதியுள்ள, தியாக உணர்ச்சியுடைய, தன் உத்தராதிகாரிக்கு (வாரிசுக்கு) இல்லத்தின் பாரத்தை ஒப்பித்துவிட்டு, தியாக வழியில் இன்னும் முன்னேறுவதற்காக 'வானப்பிரஸ்த' ஆசிரமத்தில் புகுகிறுன். கடைசியில், நான்காவது ஆசிரமமான சந்நியாசத்தில் செம்மையாகப் பரிபூரணமான தியாகம் செய்து இறைவனேடு ஒன்றுகிறுன். நான்கு ஆசிரமங்களும் மனிதனை அடுத்தடுத்து மேன்மேலும் தியாக நிலைக்குக் கொண்டு செல்கின்றன. அவை தத்தமக்கு முந்திய ஆசிரமமாகிய உறுதியான அடிப்படையை ஆதாரமாகக் கொண்டு நிலைநிற்கின்றன.

---

* यथा वायुं समाश्रित्य वर्तन्ते सर्वजन्तवः ।
तथा गृहस्थमाश्रित्य वर्तन्ते सर्व आश्रमाः ॥
यस्मात् त्रयोऽप्याश्रमिणो ज्ञानेनान्नेन चान्वहम् ।
गृहस्थेनैव धार्यन्ते तस्माज्ज्येष्ठाश्रमो गृही ॥
स संधार्यः प्रयत्नेन स्वर्गमक्षयमिच्छता ।
सुखं चेहेच्छता नित्यं योऽधार्यो दुर्बलेन्द्रियैः ॥
(मनु० ३ । ७७-७९)

'எல்லா உயிர்களும் பிராணவாயுவைப் புகலாகக் கொண்டு வாழ்வதுபோல, எல்லா ஆசிரமங்களும் இல்லறத்தானைப் புகலாகக் கொண்டு வாழ்கின்றன ஏனென்றால், இல்லறத்தானே எப்பொழுதும் கல்வியும் உணவும் அளித்து மற்ற மூன்று ஆசிரமத்திலுள்ளவர்களை நிலைக்க வைக்கிறுன். ஆதலால் கிருகஸ்தாசிரமத்தில் இருப்பவன் மற்ற மூன்று ஆசிரமங்களில் இருப்பவர்களைவிட உயர்ந்தவன். விண்ணுலகத்து அழியாத இன்பத்திலும் இவ்வுலக இன்பத்திலும் விருப்பமுடையவன் முயற்சியோடு இல்லறத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்; புலனடக்கமற்றவர்களால் இந்த இல்லறத்தைக் கடைப்பிடிக்க முடியாது.'

## திருமணம்

ஹிந்து பண்பாட்டில், திருமணம் என்பது எப்போதும் அறுபடாத, மிகவும் தூய ஒரு தருமச் சடங்கு; வேள்வி. அது புலன்களின் சுகபோகங்களுக்காக அன்று; மகப்பேற்றின் வாயிலாகப் பரலோகத்துப் பித்ருக்களுக்கு இன்பமூட்டவும் தேவர்களைக் களிப்பிக்கவுந்தான். இதில் விவாக ரத்தைப் பற்றிய பேச்சே கிடையாது. சன்ம சன்மாந்தரம் வரைக்கும் கணவனுக்கும் மனைவிக்கும் தூய தொடர்பு நிலைத்திருக்கிறது. இதனால்தான் ஹிந்து மங்கையர் மென்னகை பூத்தபடியே கணவனுடைய பிணத்தோடு ஸதியாகிறார்கள். மிகவும் கெட்டுப் போன இந்தக் காலத்திலுங்கூட ஸதிகளின் விந்தைச் செயல்கள் நடக்கத்தான் நடக்கின்றன.

## பெரியோர்களுக்குத் தொண்டு

ஹிந்து பண்பாட்டில், தாய் தந்தையரையும் ஆசிரியர்களையும் மகான்களையும் வழிபட்டுப் போற்றித் தொண்டு செய்வது மிகவும் முக்கியமானது. மனுவின் மொழி இது—

> आचार्यश्च पिता चैव माता भ्राता च पूर्वजः ।
> नार्तेनाप्यवमन्तव्या ब्राह्मणेन विशेषतः ॥
>
> आचार्यो ब्रह्मणो मूर्तिः पिता मूर्तिः प्रजापतेः ।
> माता पृथिव्या मूर्तिस्तु भ्राता स्वो मूर्तिरात्मनः ॥
>
> यं मातापितरौ क्लेशं सहेते सम्भवे नृणाम् ।
> न तस्य निष्कृतिः शक्या कर्तुं वर्षशतैरपि ॥

**त्रिष्वप्रमाद्यन्नेतेषु त्रींल्लोकान् विजयेद् गृही।**
**दीप्यमानः स्ववपुषा देववद् दिवि मोदते॥**

(मनु॰ २। २२५, २२६, २२७, २३२)

'ஆசிரியன், தந்தை, தாய், அண்ணன் ஆகியவர்களை—இவர்களால் துன்பமுற்ற போதிலுங்கூட—யாரும் அவமானப்படுத்தக் கூடாது. சிறப்பாக, அந்தணன் இவர்களை அவமானப்படுத்தவே கூடாது; ஏனென்றால் ஆசிரியன் பிரமனுடைய வடிவம்; தந்தை உலகத் தலைவனுடைய வடிவம்; தாய் நிலத்தின் வடிவம்; அண்ணனே அவனவனுடைய மற்றொரு வடிவம். (இவர்களை அவமானப்படுத்துவது அந்தத் தெய்வங்களை அவமானப்படுத்துவதாகும்.) மக்களைப் பெற்றெடுத்து அவர்களைக் காத்து வளர்த்துப் பெரியவர்களாக்குவதற்குத் தாய் தந்தையர் எவ்வளவு துன்பத்தைத் தாங்குகிறார்களோ அதற்குக் கைம்மாறாக நூற்றுக் கணக்கான ஆண்டுகள் தொண்டு செய்தாலும் போதாது.'

'தாய், தந்தை, ஆசிரியன் ஆகிய இம்மூவருக்கும் தொண்டு செய்யும் இல்லறத்தான் மூவுலகங்களையும் வெற்றிகொள்கிறான்; சொர்க்கத்தில் கதிரவன் போலத் தன் ஒளியுடலால் சோதியைப் பரப்பி இன்பத்தில் ஆழ்ந்திருக்கிறான்.'

**अभिवादनशीलस्य नित्यं वृद्धोपसेविनः।**
**चत्वारि तस्य वर्धन्ते आयुर्विद्या यशो बलम्॥**

(मनु॰ २। १२१)

'எப்பொழுதும் பெரியவர்களை வணங்கி வழிபடுகிற வனுடைய ஆயுள், கல்வி, புகழ், வலிமை ஆகிய நான்கும் வளருகின்றன.'

## பாரத நாட்டின் மகிமை

ஹிந்து பண்பாட்டின் சில முக்கியமான இலக்கணங்களை மட்டுமே இங்கு எடுத்துக் காண்பித்திருக்கிறோம். உண்மையில் ஹிந்து பண்பாடு ஆன்மிக வளர்ச்சியையே தலைமையாகக் கொண்டது. நடைமுறையில் பொது மக்களின் நன்மையை முற்றும் நினைவில் கொண்டு, சத்தியமும் நீதியும் நிரம்பிய வழியில், எதிலும் பற்றற்று, இவ்வுலகில் முன்னேறுவதும், அதிலுங்கூட வாழ்வின் கடைசி நோக்கமான இறைவனை என்றும் மறவாமல், தொடர்ச்சியாக அவனை நோக்கிச் செல்வதுமே இந்தப் பண்பாட்டின் முதன்மையான இயல்பு. தூய பாரத நாட்டிலே இந்த மகத்தான பண்பாடு உதித்தது; இதனாலேயே பாரத நாடு அரிய பாக்கியம் செய்த பெரு நாடாக நிலவுகிறது, இனியும் நிலவும்.

गायन्ति देवाः किल गीतकानि
धन्यास्तु ते भारतभूमिभागे ।
स्वर्गापवर्गास्पदमार्गभूते
भवन्ति भूयः पुरुषाः सुरत्वात् ॥

(विष्णुपुराण २ । ३ । २४)

'"சொர்க்கத்துக்கும் மோட்சத்துக்கும் வழியாக அமைந்த பாரத நாட்டில் பிறந்தவர்கள், தேவர்களான எங்களைவிடப் பெரிய பாக்கியவான்கள்" என்று தேவர்களுங்கூட ஓயாமல் பாடுகிறார்கள்.'

अहो अमीषां किमकारि शोभनं
प्रसन्न एषां स्विदुत स्वयं हरिः।
यैर्जन्म लब्धं नृषु भारताजिरे
मुकुन्दसेवौपयिकं स्पृहा हि नः॥

किं दुष्करैर्नः क्रतुभिस्तपोव्रतै-
र्दानादिभिर्वा द्युजयेन फल्गुना।
न यत्र नारायणपादपङ्कज-
स्मृतिः प्रमुष्टातिशयेन्द्रियोत्सवात्॥

कल्पायुषां स्थानजयात् पुनर्भवात्
क्षणायुषां भारतभूजयो वरम्।
क्षणेन मर्त्येन कृतं मनस्विनः
संन्यस्य संयान्त्यभयं पदं हरेः॥

(श्रीमद्भा० ५।१९।२१-२३)

தேவர்கள் பாரத நாட்டில் பிறந்தவர்களை இப்படிப் போற்றுகிறார்கள்—'ஆகா! பாரத நாட்டில் இறைவனுடைய தொண்டுக்குரிய மனிதப் பிறவியைப் பெற்ற ஜீவன்கள் என்னதான் புண்ணியம் செய்தனவோ? அல்லது இறைவனே இந்த மனிதர்களிடம் அன்பும் அருளும் கொண்டுவிட்டானோ? இந்தப் பெரும் பாக்கியத்துக்குத்தானே நாங்களும் ஓயாமல் வேட்கை கொண்டு அலைகிறோம்! மிகவும் கடுமையான வேள்வியும் தவமும் விரதமும் தானமும் செய்து நாங்கள் பெற்ற இந்த இழிவான சொர்க்க பதவியினால் என்ன பயன்? இங்கே நாங்கள் மிகுதியான புலன்களின் நுகர்ச்சியில் அழுந்திக் கிடப்பதனால், எப்போதுமே ஸ்ரீமந் நாராயணனுடைய

திருவடிக் கமலங்களின் நினைவு வருவதில்லை. இந்தச் சொர்க்கம் கிடக்கட்டும்—ஒவ்வொரு கற்பகாலம் ஆயுளைப் பெற்றிருந்தும் மீண்டும் உலகச் சக்கரத்திற்குத் திரும்ப வேண்டியவர்களான பிரம்மலோக வாசிகளைவிட, பாரத நாட்டில் கணப் பொழுது ஆயுள் பெற்றுப் பிறந்தவர்கள் மேன்மையானவர்கள்; ஏனென்றால், அங்கே தீர புருஷன் ஒருவன் ஒரே கணத்தில் தன்னுடைய இந்த அழியும் உடலினால் செய்த முழுச் செயலையும் இறைவனுக்கு அர்ப்பணம் செய்து அழியாப் பெரும் பதத்தை அடைய முடிகிறது.'

உலகத்து மக்கள் பட்சபாதமின்றி இந்தப் பண்பாட்டின் மகத்தான தெய்விக இயல்பை அறிந்தார்களானால், இதனால் அவர்களுக்கு மிகப் பெரிய ஆறுதல் கிடைக்கும். இந்த நாட்டினருக்கோ இதை அறிவது பெருங் கடமையாகும். இன்று தன் வீட்டின் பெரிய பண்பாட்டையும் அதன் தூய கொள்கைகளையும் அறவே தெரிந்துகொள்ளாமல் பிறர் வாய்மொழியை எதிர்பார்த்துக்கொண்டிருப்பவர்களும், தமது தூய உன்னதப் பண்பாட்டை அவமதித்துவிட்டு வெறும் 'பொருளை'யும் 'அதிகார' த்தையும் பித்தர்கள் போல நாடி, 'சநாதன தர்ம' த்தின் அழிவிலேயே நன்மையைக் காண்கிறவர்களும், இதன் பயனாக மேன்மேலும் பாவமும் துயரமுமாகிய அழுக்குச் சேற்றில் அழுந்தியவர்களுமான இந்த நாட்டினர் விரைவில் விழித்துக்கொண்டு, தமது பண்பாட்டை அறிந்து உணர்ந்து தமதாக்கிக்கொள்ள வேண்டியது அவர்களின் பெருங்கடமையாகும். தலை நிமிர்ந்து

உன்னதமாக நிற்கக்கூடிய பொருள் பாரதநாட்டினிடம் ஏதாவது இருந்தது என்றால், அது இந்த நாட்டின் ஆத்மிகப் பண்பாடுதான். இந்த ஆத்மிக அறிவைத் தனதாக்கிக் கொண்டு, தன்னையும் இந்தப் பண்பாட்டையும் இன்றைய அமைதியற்ற உலகத்துக்குக் கொடுத்து அதன் துயரைத் தீர்ப்பதனால்தான் பாரத நாடு தன் புண்ணியக் கடமையை நிறைவேற்ற முடியும். இறைவன் நம்முடைய அறிவுக்கு ஒளி தந்து, உலகமனைத்துக்கும் நன்மையை விளைப்பானாக.